செ.வெ.எண்: 37 நாள்: 15.11.2016

## பத்திரிகைச்செய்தி

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் பாரத் ஒலிம்பிக் கமிட்டி இணைந்து நடத்தும் மாவட்ட அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் 2016-17

2016-17-ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் பாரத் ஒலிம்பிக் கமிட்டி இணைந்து நடத்தும் மாவட்ட அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிருக்கு 20.11.2016 அன்று காலை 9.00 மணி முதல் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கை, கால் ஊனமுற்றோர் **(Physically Challenged-Orthopedically handicapped Men & Women),** பார்வையற்றோர் **(Visually impaired – Total Blind & Partially Sighted Men & Women),** மனநலம் பாதிக்கப்பட்டவர் **(Intellectually Challenged- Mentally Retarded Men & Women),** காது கேளாதோர் **(Hearing impaired – Deaf Men & Women)** ஆகியோருக்காக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்வதற்கான விதிமுறைகளாவன - மாவட்ட மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் கண்டிப்பாக அரசு வழங்கிய Identy Card-ஐ அவசியம் கொண்டு வருதல் வேண்டும், மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கு வயது வரம்பு கிடையாது, மாவட்ட மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் அவர்கள் குறிப்பிட்ட பிரிவில் விளையாடுவதற்கு அக்குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்தவரா என உறுதி செய்வதற்காக அரசு வழங்கிய ஐனநவெல ஊயசன-ஐ அவசியம் கொண்டு வருதல் வேண்டும், குறிப்பிட்ட பிரிவில் விளையாட கலந்து கொள்பவர்கள் ஒருவர் ஒரு விளையாட்டில் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும், மாவட்ட அளவில் முதல் இடத்ததை பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

2016-ம் ஆண்டு அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தினை சிறப்பிக்கும் வகையில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் பாரத் ஒலிம்பிக் கமிட்டியின் சார்பில் அ) செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான போட்டிகள், ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கான போட்டிகள், இ) கடுமையாக உடல் மற்றும் கால்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான(நடக்கும் சக்தியற்றவர்கள்) (உதவி உபகரணங்களின் உதவியுடன்) (ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் பொதுவாக தனித்தனியாக இப்போட்டி நடத்தப்பட வேண்டும்), கைகள் பாதிக்கப்பட்டோருக்கான போட்டிகள், மனவளர்ச்சி குன்றியோருக்கான போட்டிகள், ஸ்பாஸ்டிக் குழந்தைகளுக்கான போட்டிகள் (ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் பொதுவாக தனித்தனியாக இப்போட்டி நடத்தப்பட வேண்டும்), அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் பொதுவான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் உரிய ஆவணங்களுடன் 20.11.2016 அன்று காலை 8.30 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்தில் ஆஜராகுதல் வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**